**உயிரியல் இரசாயன, நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவகம் - 2015**

---

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த உயிரியல் இரசாயன, நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 2003 இன் 01 ஆம் இலக்க உயிரியல் இரசாயன, நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவக வழிகாட்டியின் 17 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காட்டப்பட்டுள்ளன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக

கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

---

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, உயிரியல் இரசாயன, நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02**

---

காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,749,648 தொகையான நடைமுறையல்லாச் சொத்துக்கள் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03**

---

நடைமுறையல்லாத சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 52,662,824 கிரயத்திலான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வழுவினைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினுள் செலவிடப்பட்ட மூலதன மானியங்களுக்காக (Capital Grant Spent) 4 பேரேட்டுக் கணக்குகள் பேணப்பட்டிருந்ததுடன், அதில் இரண்டு பேரேட்டுக் கணக்குகளில் இடம்பெற்ற கணக்கீட்டு வழுக்கள் காரணமாக ரூபா 1,991,832 ஆன வரவு மீதிகள் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் நூலகத்திற்கு நன்கொடையாக கிடைக்கப்பெற்றிருந்த 346 புத்தகங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த நடைமுறையல்லாத சொத்துக்களின் பெறுமதியை நிலையான சொத்துக்கள் பதிவேட்டுடன் ஒப்பிடும் போது ரூபா 5,877,100 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை**

பின்வரும் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்கி ஒழுகாமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| நிதிப் பிரமாணம் 371 | பதவிநிலைத் தரமல்லாத 15 உத்தியோகத்தர்களுக்கு 57 சந்தர்ப்பங்களின் போது ரூபா 662,447 கூட்டுத்தொகையான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ஆ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நடைமுறையல்லாச் சொத்துக்களுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2 பிரிவுகள் | நிறுவகத்தின் 05 கல்விசார் உத்தியோகத்தர்களினது வருகையை உறுதிப் படுத்தாமல் ரூபா 10,161,078 ஆன சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. |

**2.4 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

உயர் கல்வி அமைச்சினதும் நிதி அமைச்சினதும் அங்கீகாரமின்றி நிறுவகத்தின் நிதியினைப் பயன்படுத்தி ஊழியர் நலன்புரி நிதியமொன்று தாபிக்கப்பட்டிருந்ததுடன்,

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பிரதான கணக்கிலிருந்து ரூபா 392,850 தொகை முறையான அங்கீகாரமின்றி நலன்புரி நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 3,613,509 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 9,687,230 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 6,073,721 ஆல் குறைவடைந்தமைக்காக, சம்பளம் மற்றும் படிகள் செலவினம் ரூபா 10,028,816 ஆல் அதிகரித்தமையும் உழைத்த வருமானம் ரூபா 6,514,872 ஆல் குறைவடைந்தமையும் பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் நடைமுறை விகிதம் 10.3 ஆக இருந்த போதிலும், நடைமுறைச் சொத்துக்களில் 35 சதவீதம் குறுங்கால முதலீடுகளையும் காசு மீதிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், நிறுவகத்தின் கருத்திற் கொள்ளக்கூடிய சொத்துக்கள் திரவச் சொத்துக்களாக பேணப்பட்டுச் செல்லப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் நிரந்தர பதவியணியில் 4 விரிவுரையாளர்கள் இருக்கையில் கலங்கள் மற்றும் நுண் எதிர்ப்புச்சக்தி தொடர்பான விஞ்ஞானமானி பாடநெறிக்காக மாதமொன்றுக்கு 45,000 தொகை கொடுப்பனவு அடிப்படையில் பாடநெறி இணைப்பாளரொருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் 09 மாதங்களுக்காக ரூபா 405,000 ஆன கூட்டிணைப்பு படிகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) பாடநெறி வருமானம் உட்பட 2015 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் மொத்த உழைப்பு வருமானம் 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 46 சதவீதம் வீழ்ச்சியடைந்திருக்கையில் 2015 சனவரி 22 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையில் வெளிவாரி விரிவுரையாளர்களின் படிகளை தீர்மானிப்பதற்காக முகாமைத்துவ சபைக்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் மணித்தியாலத்திற்கான வெளிவாரி விரிவுரையாளர்களின் படிகள் ரூபா 2,500 முதல் ரூபா 5,000 வரை 100 சதவீத்தினால் அதிகரிக்கப்பட்டிருந்தது. விகிதத்தை அதிகரிப்பதற்கு முன்னர், நடாத்தப்பட்ட விரிவுரைகளுக்காகவும் அதிகரிக்கப்பட்ட விகிதத்தை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு

செய்தமையால் ரூபா 496,212 ஆன மேலதிக விரிவுரைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தன.

**4.2 தொழிற்பாட்டு செயற்பாடுகள்**

உயிர் பல்வகை தொழில்நுட்ப தொடர்பான விஞ்ஞானமானி பாடநெறி 2012/2013 இன் பின்னர் ஆட்சேர்ப்பதனை இடைநிறுத்தியதற்கான காரணங்கள் கணக்காய்வின் போது தெளிவுபடுத்தப்படவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

நிறுவகம் இறக்குமதி செய்த பொருட்களுக்குரிய சுங்கக் கட்டணங்கள் ரூபா 511,351 தொகை செலுத்தப்பட்டிருக்கும் போது பொருட்களை விடுவிப்பதற்காக செலுத்தப்பட்டதாக குறிப்பிட்டு தனியார் பொருள் விடுவிக்கும் நிறுவனமொன்றுக்கு ரூபா 201,770 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதில் ரூபா 32,500 தொகை பொருட்களை விடுவிக்கும் கம்பனியின் கட்டணமாகவும் எஞ்சியது வேறு ஒரு நிறுவனத்திற்கான கொடுப்பனவு என உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவற்றை உறுதிப்படுத்துவதற்கு பற்றுச்சீட்டுக்கள் உறுதிச்சீட்டுடன் இணைக்கப்பட்டிருக்கவில்லை. பொருட்களை விடுவிக்கும் கம்பனிக்காக மேற்குறித்த தனியார் கம்பனி தெரிவு செய்யப்பட்ட முறைகள் மற்றும் மூல ஆவணங்கள் இல்லாமல் செலவு செய்யப்பட்ட முறை கணக்காய்வின் போது தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.4 பதவியணியினர் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் வெற்றிடங்கள் 06 காணப்பட்டதுடன், அவ்வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு புறம்பாக முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் பணிப்பொறுப்பு அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த 09 ஊழியர்களுக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத மதியுரையாளர் பதவியொன்று ஏற்படுத்தப்பட்டு மாதமொன்றுக்கு ரூபா 200,325 வீதம் மீளாய்வாண்டில் ரூபா 701,137 கூட்டுப்பெறுமதியான மதியுரைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. குறித்த உத்தியோகத்தர் நிறுவகத்தின் முகாமைத்துவ குழுவிலும், ஆராய்ச்சி மற்றும் உயர் பட்டங்கள் குழுவிலும், கல்விக் குழுவிலும் தற்போது அங்கத்தவராக இருப்பதுடன், மதியுரையாளராக வழங்கப்பட்டுள்ள கடமைப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள அனேக செயற்பாடுகள் நிறுவக வழிகாட்டியின் பிரகாரம் மேற்குறித்த குறிப்பிடப்பட்ட குழுக்களினால் மேற்கொள்ளப்பட வேண்டியதென அவதானிக்கப்பட்டது.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு

வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கொள்வனவுச் செயற்பாடுகளின் கட்டுப்பாடு | விலை விபரங்கள் கோரி கொள்வனவு இடம்பெறாமை |
| (ஆ) முற்பணக் கட்டுப்பாடு | பதவி நிலைத்தரமில்லாத உத்தியோகத்தர்களுக்கு முற்பணம் வழங்குதல் |